பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 14 ஞாயிற்றுக்கிழமை (26-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 150

# மணலாறுப் பகுதியில் நேற்று கடும் சண்டை

## ஐந்து படையினர் பலி; பல ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஏப்ரல் 26

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் பகுதிகளில் நேற்று ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் சமர் மூண்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் நடத்திய தீரமிக்கத் தாக்குதல்களின் போது படையினர் தரப்பில் ஐவர் உயிரிழந்தனர் என்றும், மற்றும் நால்வர் படுகாயமடைந்தனர் என்றும் படையினரிடம் இருந்து ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன என்றும் முற்கொண்டு கிடைத்த செய்திகளிலிருந்து தெரியவந்தது.

ஸ்ரீலங்காப் படையினர் மும்முனைத் தாக்குதல்களை நடத்திய போதிலும், விடுதலைப் புலிகள் சளைக்காது நின்று பொருதினர் என்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் ராணுவ நடவடிக்கை:

## மன்னார் வீதி வழியாக ராணுவம் முன்னேற முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 26

வவுனியாவில் உள்ள ஸ்ரீ லங்கா படையினர் மன்னார் வீதி வழியாக முன்னேறுவதற்கு இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள முயற்சிகளைச் செய்து வருவதாக தெரிய வருகிறது.

இந்த இராணுவ நடவடிக்கைக்காக வவுனியா நகரிலும் மற்றும் நெலுக்குளம், பாவற்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா — மன்னார் வீதி வழியாக முன்னேறுவதற்கு படையினர் ஏற்கனவே மூன்று பெரும் நடவடிக்கைகளை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

[ஒ-3]

## கிழக்கிற்கு புதிதாக மேலதிக துருப்புகள்

விடுதலைப் புலிகள் மீது புதிதாக அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவம் திட்டமிட்டு வருவதாகவும் கிழக்கு மாகாண யுத்த முனைகளுக்கு புதிதாகத் துருப்புகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதே சமயம் வடக்கு — கிழக்கு பிராந்தியத்தில் உள்ள போர் முனைகளுக்கு முப்படைகளின் தளபதிகளும், இவ்வார இறுதியில் விஜயம் செய்து நிலைவரங்களை மதிப்பீடு செய்ய இருந்தனர் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இராணுவக் கட்டமைப்பில் ஜனாதிபதி பிரேமதாஸா குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்த பின்னர் முப்படைகளின் தளபதிகளும் போர் முனைகளுக்கு கூட்டாக மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இது என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-எ]

## வட பகுதியில் இருந்தும் கிழக்கிற்குப் படைகள்?

## இல்லை என்கிறார் ராணுவ பேச்சாளர்

கொழும்பு, ஏப். 26

வட பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் எவரும் கிழக்கிற்கு அனுப்பப்படவில்லை.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் இராணுவப் பேச்சாளர் கேர்ணல் முனசிங்ஹ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தில் பிளவு ஏது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஏப். 26

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நேற்று அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

(உ-10)

## காங்கேசனுக்கு மீண்டும் வாகன அணி!

யாழ்ப்பாணம், ஏப். 26

காங்கேசன்துறைக்கு மீண்டும் இன்று வாகன அணி செல்ல ஏற்பாடாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் காங்கேசன் நோக்கிச் சென்ற வாகன அணி மீது சேந்தாங்குளம் கடற்பகுதியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்பதும்—

அதை அடுத்து வாகன அணி திரும்பிவந்துவிட்டது என்பதும் தெரிந்தவையே.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதை அடுத்து மீண்டும் வாகன அணி இன்று செல்ல ஏற்பாடாகியுள்ளதாக செஞ்சிலுவை வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-3]

## தபால் பொதிகள் இன்று வரும்

யாழ்ப்பாணம், ஏப். 26

'குமண' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

தபால் பொதிகள் மற்றும் உணவுப்பொருள்கள் கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

## பரீட்சை முடிவுகள் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஏப். 26

1991 டிசம்பரில் நடைபெற்ற — 1990 ஆம் ஆண்டுக்குரிய — ஜி. சி. ஈ. (சாதாரண) தர விசேட பரீட்சையின் முடிவுகள் வெளியாவது மேலும் தாமதமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தற்சமயம் அமுலில் உள்ள மின்வெட்டு காரணமாக பரீட்சைத் திணைக்களத்தில் பரீட்சை முடிவுகளை நிரைப்படுத்தும் வேலைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்—

பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியிலேயே பரீட்சை முடிவுகள் வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சுமுகமான முறையில் நேற்றைய பேச்சுக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த குருமார் தூதுக்குழுவினர், இனப் பிரச்சினைத் தீர்வு குறித்துத் தம்மிடம் சமர்ப்பித்த ஒன்பது அம்ச யோசனைக்கு, விடுதலைப் புலிகள் தலைவர்கள் நேற்றுப் பதிலளித்தனர்.

விடுதலைப் புலிகள் தெரிவித்த பதில்களின் விவரம் எதுவும் தெரியவரவில்லை.

நேற்றைய பேச்சுக்கள் சுமுகமான முறையில் நடைபெற்றதாகவும், பௌத்த குருமாரின் யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகள் தலைவர்கள் தமது கருத்துக்களைக் கூறியதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளின் சார்பில் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா), அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மற்றும் திரு. யோகரத்தினம் யோகி, திருமதி அடல் பாலசிங்கம், செல்வி ஜெயா ஆகியோர் கலந்துகொண்டனர்.

[அ-8]

## நகரின் பல பகுதிகளுக்கு பிக்குமார் குழு விஜயம்

யாழ்ப்பாணம், ஏப்: 26

யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த குருமார் தூதுக்குழுவினர் நேற்றுக் காலை 8:30 மணியளவில் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தனர்.

அங்கு ஆஸ்பத்திரியை இயங்கச் செய்வதில் உள்ள கஷ்டங்கள், குறைபாடுகள், தட்டுப்பாடுகள் என்பன குறித்து அதிகாரிகளுடன் சிங்களத்திலும் தமிழிலும் உரையாடிக் கேட்டறிந்தனர்.

ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி ந. கனகரத்தினம் ஆஸ்பத்திரியை கஷ்டங்கள், பற்றாக்குறைகளின் மத்தியிலேயே நடத்தி வருவதாகவும், ஊழியர்களின் ஒத்துழைப்பினாலேயே ஒருவாறு சேவை செய்ய முடிகிறது என்றும் தெரிவித்தார்.

பௌத்த குருமார் பின்னர் வார்ட்டுகளுக்குச் சென்று நோயாளருடன் தமிழில் உரையாடிஅவர்களின் அவலங்களைக் கேட்டறிந்தனர்; நோயாளர்களின் இடர் தீர ஆசி வழங்கி, பிரித் ஓதினர்.

குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்களினால் சேதமுற்ற ஆஸ்பத்திரி கட்டடங்களையும் அவர்கள் பார்த்தனர்.

சுமார் ஒருமணி நேரத்தை ஆஸ்பத்திரியில் கழித்த பின்னர், தூதுக்குழுவினர் யாழ். பஸ் நிலையம், நவீன சந்தை, கடைகள் ஆகியவற்றுக்கும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொம்படி குண்டு வெடிப்பு ஒரு நாசகாரச் செயலே!

யாழ்ப்பாணம், ஏப். 26

''மக்களைப் பெரும் எண்ணிக்கையில் கொல்லவும் பௌத்த பிக்குகளின் நல்லெண்ண விஜயத்தை குழப்பும் நோக்கத்திலும் திட்டமிடப்பட்ட நாசகாரச் செயலே கொம்படி குண்டு வெடிப்புச் சம்பவம். நிலத்தினுள் புதையுண்டு கிடந்த குண்டே வெடித்தது என்று மக்களைத் திசை திருப்பும் வகையில் வதந்திகள் பரப்பப்படுகின்றன. மக்கள் விழிப்புடனும் அவதானமாகவும் நடந்து தேசவிரோதிகளின் இவ்வாறான அழிவுச் செயல்களை தடுக்க வேண்டும்.''

— விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. பொற்கோ இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று கோண்டாவிலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குண்டு வெடித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் படி நிலத்துக்கு மேலே சிறு பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே அங்கு வெடித்துள்ளது. அடுப்பு எரிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இடங்கள், குண்டு வெடித்த இடத்தில் இருந்து சிலயார் தூரம் தள்ளியே காணப்படுகின்றன; குண்டு வெடிப்புக்கும் அவற்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஏழு தமிழ்க் குழுக்கள் கூட்டாக யோசனை

கொழும்பு, ஏப். 26

கொழும்பில் இயங்கும் ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

தேர்தல் ஏதுமின்றி வடக்கும், கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்படவேண்டும் என அந்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படக்கூடாதெனவும் —

தனி அரசுக்கு மாற்றாக பூரண சுயாட்சி அதிகாரம் கொண்ட பிரதேச ஆட்சி அமைக்கப்படவேண்டும் என்றும் —

அந்த யோசனைகளில் கூறப்பட்டுள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[அ - 10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்
(மருதனார்மடம் கல்விக் கோட்டம்)

## விசேஷ பொதுச் சபைக் கூட்டம்

இடம்: சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில்.
காலம்: 27—04—1992 திங்கள் மாலை 4 மணி
விடயம்: I மேதினம், முத்தமிழ் விழா பற்றிய கலந்துரையாடல்
II சட்ட மீறல் பற்றிய ஒழுங்கு நடவடிக்கைகள்
III நிர்வாக சபை அங்கத்தவர்கள் பற்றிய மீளாய்வுகள்.

★ த. வி. பு. பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள். தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களும், ஆசிரியர்களும், பிரத்தியேக வகுப்பு நடத்தும் ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

வரதன்—குகன்,
(இணைச் செயலாளர்கள்)
(சி/1949)



# கண்ணாடிநார் நீர்த் தொட்டிகள்
(Fibreglass Water Tank)

கண்ணாடிநார் நீர்த் தொட்டிகள் தேவையாக உள்ளன. விற்க விரும்புவோர் கொள்ளவையும், விலையையும் தெரிவித்துத் தொடர்பு கொள்ளவும்

30, செட்டித்தெரு,
நல்லூர்.
[சி-1944]



# உயர்கலை கல்லூரி
ஆனைப்பந்தி.

B. A. 92/93 — 8மணி
G. A. Q 92/93 — 2மணி


ஆரம்பம்:- 26 - 4 - 92

தமிழ்—திரு. குழந்தை

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
(சி/1952)


# 90 ஆவது நினைவு நாள்

தோற்றம்:
27
07
1952



மறைவு:
27
01
1992

அமரர்
## சிவரத்தினம் அருட்சோதி

பெருடைத் தமிழிற்கு வரைகள் செய்பவர்
நீறாகப் போவரென கூவுகுயிலே – எனக்கினி
வீறுடன் எழுந்த வீரன் இன்று எங்கே!!!

ஆறாத் துயருறும்;
குடும்பத்தினர்.
கல்வியங்காடு. [20683]

# முத்தமிழ் விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள்

குருநகர், ஏப் 26

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் முத்தமிழ் விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5 மணிக்கு சுவாமி ஞானப்பிரகாச அரங்கில் நடைபெறுகின்றன.

இன்றைய விழாவில் பாமாலை சூட்டல், யாழ். ஆயர் மேதகு வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையை கௌரவித்தல், கவியரங்கம், நாடகம் ஆகியவை சிறப்பம்சமாக இடம்பெற உள்ளன.

யாழ். ஆயர். மேதகு வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழாக்களைச் சிறப்பிக்கு முகமாக இந்த விழா நடைபெற்று வருவது தெரிந்ததே (த-51)

# தந்தை செல்வா நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 26

தந்தை செல்வநாயகத்தின் பதினைந்தாவது நினைவு நாளையொட்டி இன்று அஞ்சலி நிகழ்ச்சியும், கூட்டமும் நடைபெற உள்ளன.

யாழ். கோட்டைப் பகுதியில் 80 அடி உயரமான தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு காலை எட்டு மணிக்கு மலரஞ்சலி செலுத்தப்படும்.

மாலை ஐந்து மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும்

திருவாளர்கள் க. சொக்கலிங்கம், ச. அ. தர்மரத்தினம், வெ. கோடீஸ்வரன், ஐ. சச்சிதானந்தன், புலவர் வேல் மாறன் ஆகியோர் நினைவுரை ஆற்றுவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் சிறப்புரை ஆற்றுவர்

தந்தை செல்வா நினைவு நாள் ஏற்பாட்டுக் குழுவினர் ஒழுங்கு செய்துள்ள இவ்விழாவில் கவியரங்கம், நாடகம், ஆகியனவும் இடம்பெறும். [அ-15]

# கொம்படி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிற்கும் சம்பந்தமே இல்லை.

குண்டு வெடித்த இடத்தில் சுமார் இரண்டு அடி ஆழ குழியே முதலில் காணப்பட்டது. பின்னர் நாம் அதனை மேலும் தோண்டிப் பார்த்தோம். நிலத்துள் புதையுண்ட ஒரு குண்டு வெடித்திருப்பின் பல அடி ஆழமான பெரிய குழி அங்கு ஏற்பட்டிருக்கும்.

மக்களைப் பெரும் எண்ணிக்கையில் கொல்ல தேசவிரோத சக்திகளின் உதவியுடன் அரசு நடத்திய நாசச் செயலே அது என்பதில் ஐயம் இல்லை.

பொது இடங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்படும் பொருள்களின் மற்றும் சந்தேகத்துக்கிடமாக நடமாடுபவர்கள் பற்றிய தகவல்களை மக்கள் உடன் அருகில் உள்ள முகாம்களில் அல்லது எமது உறுப்பினர்களிடம் தெரிவிப்பதன் மூலம் இது போன்ற நாசச் செயல்கள் தொடராமல் தடுக்க முடியும். — இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [ம-]

# மரண அறிவித்தல்கள்

வேலணை
## மாரிமுத்து விசுவலிங்கம்

வேலணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் கட்சன் றோட் வட்டுக்கச்சியை வசிப்பிடமாக கொண்டவருமான மா. விசுவலிங்கம் 30 – 3 – 92 இல் வேலணையில் காலமானார் இவர் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து நாகமுத்து தம்பதிகளின் மூத்த மகனும், புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பழனியாச்சி தம்பதிகளின் மருமகனும், மனோன்மணியின் [செல்லம்], அன்புக்கணவரும், முத்துலிங்கம், தங்கலிங்கம், கைலாயபிள்ளை, சிவம் [ஜெயச்சித்திரா ஜுவலர்ஸ்], செல்வம் ஆகியோரின் அன்புத்தந்தையும், பாக்கிய லெட்சுமி, அனுசம்மா, கமலாதேவி, தேவகி ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்ற வள்ளியம்மை செல்லப்பா, சரவணமுத்து, பண்டிதர் மாணிக்கம் [ஆளவெட்டி], மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகமணி, சதாசிவம் இராசம்மா, மற்றும் சின்னத்தங்கம், நாகம்மா [இளைப்பாறிய ஆசிரியை] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் வேலணையில் 31 - 3 - 92 இல் நடைபெற்றன. இதையொட்டிய துக்க நிகழ்வுகள் எமது இல்லத்தில் இன்று நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

இல 10, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வி. முத்துலிங்கம்
[மகன்]

[20728]

## செ. தேவராஜா

[இளைப்பாறிய தபால் அதிபர்]

செல்லத்துரை தேவராஜா [இளைப்பாறிய தபால் அதிபர்] அவர்கள் 24-4-92 இல கொழும்பில் காலமானார். இவர் சரவணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மகனாரும், நாகேஸ்வரியின் அன்பு கணவரும், பிரசன்னனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமசிங்கம், தம்பதிகளின் மருமகனும், திருமதி பாக்கியலட்சுமியின் மருமகனும், திரு. குணரத்தினம் [இளைப்பாறிய செயலாளர் மின்சக்தி எரிபொருள் அமைச்சு] திருமதி சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பத்மாவதி, திரு. தியாகராசா [ஓவுய்பெற்ற இலிகிதர்.] திருமதி தவமணி, திருமதி சரஸ்வதி [ஆசிரியை] ஆகியோரின் மைத்துனரும், திரு. உலகநாதன் [அதிபர்], திரு. தனபாலன் [ஆசிரியர்] ஆகியோரின் சகலனும், Dr. தமயந்தி சத்தியேந்திரா [மருத்துவ பீடம்], மகேந்திரா [B.com] ஆகியோரின் சித்தப்பாவும், சசிகரன் [பல்கலைக்கழகம், இந்தியா], சிறீகரன் [மருத்துவ பீடம்], விக்னராசா [யா. இந்து], ஜயந்தி [சுண்டிக்குளி] சண்முகதாசன் [யா. இந்து] ஆகியோரின் மாமனாரும், அச்சுதன், சங்கர், மாதங்கி, செந்தூரன், பிரதாயினி, சிவாஜினி ஆகியோரின் பெரியப்பாவும். ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-4-92 இல் கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. தியாகராசா
[சகோதரி]

122, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்.
[20729]

## அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் பொன்கலன்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், இராசாவின் தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் பொன்கலன் 25 04. 1992 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எஸ் அந்தோனிப்பிள்ளை (முன்னாள் ஆசீர்வாதம் அச்சக முகாமையாளர்), சூசன் இரத்தினத்தின் அன்புப் புதல்வனும், மேரி மாகிரட்டின் அன்புக் கணவனும், நொயலின் அனிற்ரா (ஆசிரியை, நாகேஸ்வரி மகா வித்தியாலயம், சுன்னாகம்) ஐவின் அனஸ்ரா (ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை), அனஸ்லி றோகான் (மாணவன், பத்திரிசியார் கல்லூரி), டொறின் நெஸ்ரா (மாணவி, திருக்குடும்பக் கன்னியர்மடம், ஆங்கிலப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்ராஜா, பொன்றோஸ் மற்றும் பொன்தவம், பொன்னுக்கோன் (யாழ். மாநகரசபை) பொன்மலர், பொன்ரதி, (ஆசிரியை பேசாலை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிசிலியா ஞானரெத்தினத்தின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு 26 04. 1992 இன்று காலை 09 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

42, இராசாவின்
தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஈ. ஆர். ஆசிர்வாதம்
[மைத்துனன்]
[20732]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரின் மனைவிமாருக்கு
# இறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி
# ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 26
காணாமற் போனவர்களை இறந்தவர்களாகக் கருதி, அவர்களின் இறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி அவர்களின் மனைவிமாருக்கு ஓய்வூதியம் வழங்க ஓய்வூதியத் திணைக்களம் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துள்ளது.

வழமையான சூழ்நிலையில் கணவனின் இறப்பை அத்தாட்சிப்படுத்தும் பத்திரத்தைச் சமர்ப்பித்த பின்னரே மனைவிக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஆனால் மர்மமான முறையில் காணாமற் போன அரச ஊழியர்களின் இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது முடியாத காரியம் என்று விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு ஏற்றுக் கொள்கிறது. அதனால் காணாமற் போனவர்கள் குறித்து இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கைவிட்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு முறையைக் கையாள ஓய்வூதியப் பிரிவு முன் வந்துள்ளது.

காணாமற் போன நபர் ஓய்வூதியம் பெறுபவராக இருந்தால், அவர் காணாமற் போன திகதியில் இருந்து நான்கு மாதங்கள் கழிந்த பின்னர் அவரது விதவை மனைவி ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளலாம். முன்னர் இக் கால எல்லை ஓராண்டாக இருந்தது.

சேவையில் இருக்கும் போது ஒருவர் காணாமற்போய் இருந்தால், அவர் காணாமற் போன திகதியில் இருந்து ஓராண்டு கழித்து அவரது விதவை மனைவி பென்ஷன் பெற்றுக் கொள்ளலாம். முன்னர் இக்கால எல்லை ஏழு ஆண்டுகளாக இருந்தது.

இந்த இரண்டு விஷயங்களிலும் காணாமற் போனவர்களின் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது வற்புறுத்தப்பட மாட்டாது.

ஆனால் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு கோரும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

★ காணாமற் போன ஓய்வூதியம் பெறுவோருக்கு கடைசியாக ஓய்வூதியம் வழங்கப்பட்ட திகதியை, அதனை வழங்கிய அதிகாரியிடம் இருந்து அறிக்கையாக பெற்று அனுப்ப வேண்டும்.

★ காணாமற் போனவர் எந்தத் திகதியில் இருந்து காணாமற் போனார், அதன் பின்னர் அவர் எங்கும் காணப்பட்டார் என்பது குறித்து தகவல் கிடைத்ததா ஆகியன பற்றி அவரது விதவை மனைவி அல்லது விதவர் கணவன் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்க வேண்டும்.

★ காணாமற் போனது பற்றிய பொலீஸ் அறிக்கை.

★ காணாமற் போன திகதி, காணாமற் போனவர் பின்னர் எங்கும் காணப்பட்டாரா என்பதற்கான அத்தாட்சி, காணாமற் போனது பற்றி சந்தேகம் உண்டா ஆகியன பற்றிய உதவி அரச அதிபரின் அறிக்கை.

விதவர் / விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய [1983]ச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் வரும் விதவர் / விதவைகளுக்கு இச் சலுகை வழங்கப்படுகிறது. (இ-எ)

## அனுரா திரும்பினார்

கொழும்பு, ஏப். 26
வட கொரியா சென்றிருந்த சுதந்திரக் கட்சி எம். பி. அனுரா பண்டார நாயக்கா கடந்த புதன்கிழமை கொழும்பு திரும்பினார்.

வட கொரிய ஜனாதிபதி கிம் இல் சுங்கின் 80 ஆவது பிறந்த தின விழாவில் அவர் கலந்து கொண்டார். [இ-எ]

## மொரவேவவில் 'வேட்டை நிலம்'

கொழும்பு, ஏப். 26
திருகோணமலை, மொரவேவவில் படையினர் மேற் கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை ''தடயம'' (வேட்டை நிலம்) என்று அழைக்கப்படுவதாக இராணுவப் பேச்சாளர் கேர்ணல் முனசிங்கா தெரிவித்தார். [இ-3]

## டிக்ஸிற் கொழும்பு வருவார்

கொழும்பு, ஏப் 26
நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் சார்க் வெளி விவகாரச் செயலாளர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ள, இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற் கொழும்பு வருவார் என்று ராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-த]

## மே தினம் புத்துணர்வோடு முன்னெடுக்கபபடுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 26
தொழிற் சங்கங்கள் தமது உரிமைகளுக்கு மட்டுமன்றி அரசியல் சமுதாய இயங்குதலில் இருந்து அந்நியப்படாது, எமது தேசிய உணர்வுகளையும் பிரதிபலிக்கும் செயற்பாடுகளில் இறங்குவதற்கு 'மே' தினம் வழிவகுக்கின்றது. இம்முறை 'மே' தினம் பேரெழுச்சியாக புத்துணர்வோடு முன்னெடுக்கப் படுகிறது.

விடுதலைப்புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு 'மே' தினம் தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

துறைசார்ந்த தொழிற் சங்கங்கள் தமது யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு ஸ்ரீலங்கா தொழிற்சங்கங்களின் தலைமைத்துவத்தைத் தூக்கியெறிந்துவிட்டு தமது தேசிய உணர்வை வெளிக் கொணர்கின்றன. தமிழீழத் தொழிலாளர்கள் பேரினவாதத்தால் பாதிப்புக்கு உள்ளாகி நடைப்பிணங்களாய் வாழ வழியற்று அலைகின்ற நிலைப்பாட்டிலிருந்து உறுதியுடன் ஆர்த்தெழுவதை இம்முறை 'மே' தினத்தில் காணக்கூடியதாக இருக்கும் இதன் வெளிப்பாடாக, எமது பிரதேசத்தில் சகல இடங்களிலும் சுவரொட்டிகளும். பதாதைகளும் மக்களை அணி திரளுமாறு அழைக்கின்றன.

ஆற்றல் மிகுந்த உழைப்பாளிகள் பல இடங்களில் பெரும் பந்தல்களை நிர்மாணித்து வருவதை அவதானிக்க முடிவதுடன் பெருந்திரளான மக்கள் இம்முறை எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது

இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (த)

## 25 குடும்பங்களுக்கு வீடுகள்

தென்மராட்சி, ஏப் 26
முகமாலை இந்திராபுரத்தில் உள்ள வருமானம் குறைந்த 25 குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட சர்வோதயத்தினர் வீடுகளை அமைத்து வழங்கி வருகின்றனர். அத்துடன் குறுகிய கால விவசாயக் கடன்களும் வழங்கப்படுகிறது [த-117]

## கடற்படை சிப்பாய்கள் கைது

வடக்கே செல்லும் கப்பலில் பொருள்களை ஏற்றும் வேலைகளை மேற்பார்வை செய்த கடற்படை சிப்பாய்கள் இருவர் கொழும்பு துறைமுகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது

பொருள்கள் ஏற்றுவதில் லஞ்சம் பெற்றார்கள் என்ற சந்தேகத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பின்வரும் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 05-22 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவி:

### காவற் பொறுப்பாளர்/ சமையற்காரர் [தாழ்தரம்]

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 2985 மாதமொன்றுக்கு [நிலையானது]

தகைமைகள்:

அ. எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

ஆ. தளபாடங்கள், மட்பாண்டத் தொகுதி, வெட்டுக் கருவிகளின் தொகுதி, துணிகள் என்பனவற்றைப் பேணுவதிலும், சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

இ. மேலைத்தேய, கீழைத்தேய உணவுவகைகளைத் தயாரிப்பதில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

ஈ. பல்வேறு வகையான உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள் [illegible] வுடையவராக இருப்பதுடன், குறித்த எண்ணிக்கையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களின் அளவு குறித்துப் பரிச்சயமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு:
உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு:
மேற்படி பதவிக்கான நியமனம் இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு, முத்திரையொட்டப் பெற்ற 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள், தெளிவில்லாமல் விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-04-23.

[சி-1947]



## தாதிப் பயிற்சி நெறி
## Training For Nurses

1. தாதியர்களுக்குரிய சகல பாடத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டது.
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு உரியது.
3. மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசக்கல்வி, இலவச தங்குமிடவசதி.

19—04—1992 இல் ஆரம்பமாகியுள்ளது.

அதிபர்,
### சாயி மெடிக்கல் அக்கடமி,
இல. 6, பருத்தித்துறை வீதி,
1 ஆம் ஒழுங்கை (மக்ரவல்ஸ் அருகில்),
யாழ், நகர்.

(சி/2211)



## கடல்புலிகளால் நடத்தப்படும் மாபெரும் கடல் விளையாட்டுப் போட்டி

கடலிலே காவியம் படைத்து வீரச்சாவை தழுவிய கடற்புலிகளின் நினைவாக
### சிதம்பரம், ஜெயந்தன்
ஆகியோர் நினைவு நாளாகிய மே 4 ஆம், 5 ஆம் திகதிகளில்
இப்போட்டி நடைபெறும்.

● போட்டிகள் இரு வயதுப் பிரிவுகளாக நடைபெறும்

| 17 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் | 17 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் |
|---|---|
| 100 மீற்றர் நீச்சல் | 100 மீற்றர் நீச்சல் |
| 200 மீற்றர் நீச்சல் | 500 மீற்றர் நீச்சல் |
| 01 மைல் நீச்சல் | 05 மைல் நீச்சல் |
| 18 அடி சுழி ஓடுதல் | 21 அடி சுழி ஓடுதல் |
| 4 x 100 மீற்றர் அஞ்சல் நீச்சல் | 4 x 100 மீற்றர் அஞ்சல் நீச்சல் |
| | 2 பேர் கொண்ட கட்டுமரம் வலித்தல் [1000 மீற்றர்] |

...கங்களுக்கிடையேயான போட்டி

7 பேர் கொண்ட பந்து கடத்தும் போட்டி – இது இடுப்பளவு நீரில் நடைபெறும்

மேற்படி போட்டிகள் தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கையளிப்பதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய இடங்கள்:

கடல் புலிகள் அரசியல் பிரிவு செயலகம் — மாதகல்
,, ,, ,, ,, ,, — குருநகர்
,, ,, ,, ,, ,, — தாளையடி
,, ,, ,, ,, ,, — வல்வெட்டித்துறை

★★ விண்ணப்பங்கள் யாவும் 25-04-1992 தொடக்கம் 30-04-1992 வரை மேற்படி இடங்களில் நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும்.
★★ விண்ணப்பங்கள் கழக ரீதியாக தயாரிக்கப்பட்டு மேலுறையில் 'கடல் விளையாட்டுப் போட்டிகள்' எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.
★★ போட்டிகள் யாவும் தமிழீழ ரீதியில் நடத்தப்படும்.

- விளையாட்டுத்துறை கடல் புலிகள்

[20722]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C. R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தக சாலை, இல 8, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [20681]

நல்ல இனப் பாலாடு 2 போத்தல் மறிக்குட்டியுடன் விற்பனைக்குண்டு. இராமலிங்கம், 199, கோவில் வீதி, முதலியார் வளவு, நல்லூர், யாழ்ப்பாணம். [20718]

## தேவை

கரியில் பாவிக்கும் பித்தளை பொயிலர் புதியது, பழையது தேவை. தொடர்பு கொள்ளவும் ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [20694]

பாலர் வகுப்பிலிருந்து A/L வரை தனி ஒருவருக்கோ, சிறு குழுக்களிற்கோ தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. மாலை 2-00 — 3-00 க்குள் தினசரி சந்திக்கலாம். ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [20724]

பாதுகாப்புத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். நஷனல் பாதுகாப்புத் திட்டம், 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [20725]

சகலவித உடைகளும் வெட்டித் தைக்கக் கூடிய ஆண் ரெயிலர் தேவை. நேரில் வரவும். கிறீன் சிவஸ் ரெயிலறிங், மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [20662]

## மணமகள் தேவை

ஜேர்மனியில் பயிற்றப்பட்டு கனடாவில் இயந்திர நுட்பவியலாளராக வேலை செய்யும் 29 வயது மணமகனுக்கு பெற்றோர் 23 வயதிற்கு மேற்படாத மணமகளைத் தேடுகின்றனர். விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 401, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [20721]

## இலவச திருமண சேவை

34 வயது, புனர்பூசம், செவ்வாய் இல்லை, I. C. M. A. III சித்தியுடன் U.K. இல் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. U. K. விரும்பத்தக்கது. சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா யா/நாச்சிமார் கோவிலடி. [4696]

31 வயது, பூசம், செவ்வாயற்ற, திருகோணமலை தனியார் நிறுவனத்தில் காசாளர் பதவி வகிப்பவருக்கு மணாளன் தேவை. உள்நாடு விரும்பத்தக்கது; தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா யா/நாச்சிமார் கோவிலடி. [4697]

## திருமண சேவை

"மணப் பொருத்தத்துக்கான ஜாதகங்கள் தகவல்கள் பரிவர்த்தனை நிலையம்" தரகு நோக்கற்ற திருமண சேவையை ஆரம்பித்துள்ளது. மன இசைவான துணையைப் பெற திருமணத்தை எதிர்கொள்வோரது ஜாதகங்கள், தகவல்களை பதியலாம், வளமான இவ்வாழ்வின் வழிகாட்டி நிறுவனம், 03, யாழ் வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம், (ஆரியகுளம் சந்திக்குஅண்மையில்] [4690]

## கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவின்றிக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி [20632]

Spoken English with Grammar உட்பட புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் அதி உயர் விசேட தரத்திற்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [20633]

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [சி/1888]

## A/L 92 வினாத்தாள்

A/L 92 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைப் பகுதி, Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4650]

## வெளிவந்து விட்டது

ஆண்டு 7, சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினா-விடை. ஆக்கம் க. சந்திரசேகரம். ஏக விநியோகஸ்தர்கள், ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். விலை ரூபா 20/- மட்டுமே. [சி-1943]

## பழைய புத்தகங்கள்

பாவித்த புத்தகங்கள் நியாய விலையில் வாங்க, விற்க, நகரில் புதிதாக யாழ். பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா [ஸ்ரான்லி] வீதி, யாழ்ப்பாணம். [4633]

## செவ்வாய் மாற்றம்

27-4-92 முதல் வியாழனின் சுகபார்வையால் குண்டு வெடிப்புகள், வெப்பம் தணியும் அமைதி நிலவும், தொடரும் தோல்விகளால் சிங்கள அரசு சமாதானப் பாதையை நாடும். விலை ரூபா 7/-. ஸ்ரீவாலாம்பிகா புத்தக சாலை, பன்றிக்கோட்டுப் பிள்ளையார் முன்பாக, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (Prof சத்தியதாஸன்). [20690]

## வினா — விடை

கடந்த கால விஞ்ஞான பாடங்களுக்கான வினாக்களும், விடைகளும் விற்பனைக்கு உண்டு 'A' Level Centre, உயர் தராதரக் கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-2204)

# புலமைப் பரிசில்

ஆண்டு -5

*August* - 1992

பயிற்சிப் பரீட்சை

26-04-1992

ஞாயிறு

இக் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும்.

Bond — யாழ்ப்பாணம்
Express — இருபாலை
Selin — கோப்பாய்
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
Vinyls — சுன்னாகம்
Vinayahar — ஆனைக்கோட்டை
Bitsmans — மானிப்பாய்
Paarathy — சித்தன்கேணி
National — பண்டத்தரிப்பு

விவரங்களுக்கு:

**BOND**

யாழ்ப்பாணம்.

[சி-2226]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 10 — 1926

மறைவு: 26 — 4 — 1988

திருமதி
**மகேஸ்வரி திருநாவுக்கரசு**

[யாழ். மத்திய கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை]

திதி: 11 — 05 — 1992

எல்லாம் வல்லது அறிவு என்றிட
நல்லாய்ச் சிறார்க்கு நரம்பினிலூட்டிய
பெற்றதாயாகப் பெற்ற தெம் பேறே!
உற்றாண்டெத்தனை ஓடினும் மறவோம்.

— குடும்பத்தினர்.

62, மணற்றறை ஒழுங்கை,
திருநெல்வேலி. [சி-2230]

# பதவி வெற்றிடம்

உள்ளூர் உற்பத்திப் பொருள் கொள்வனவு, விற்பனவு நிலைய முகாமையாளருக்கான விண்ணப்பம் பெண்பாலாரிடமிருந்து 4-5-1992 ஆம் திகதிக்கு முன்னதாக கோரப்படுகிறது.

விவரங்களுக்கும், விண்ணப்பப் பத்திரத்திற்கும் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
கோண்டாவில், இணுவில்.
தெ. ப. பொ. கூ. சங்கம்,
கற்பகதரு, தாவடிச் சந்தி, கோண்டாவில்.
(சி-2228)

# அறிவித்தல்

நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை
1992 — 1993

மற்படி பயிற்சி ஆண்டுக்கு மாணவ, மாணவிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு 30-4-92க்கு முன்னர் பின்வரும் தகுதிகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை 15 - 25
2. கல்வித் தராதரம் க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தி. கணிதம், தமிழ் ஆகிய இருபாடங்கள் உட்பட.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

அதிபர்,
நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை
இலக்கம் 194, அரசடிச் சந்தி, நல்லூர்.

மேலதிக விவரங்களுக்கு அதிபருடன் தொடர்பு கொள்ளவும்

[20710] உதவிப்பணிப்பாளர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



எங்கள் குடும்பத் தலைவர்

**இளையதம்பி ஜெகசோதி**

மலர்வு: 1921-08-11

உதிர்வு: 1992-03-28

28-03-92 அன்று இறைபதம் அடைந்த இளைப்பாறிய ஆசிரியர் இளையதம்பி ஜெகசோதி அவர்களின் முப்பத்தோராம் நாள் நினைவு அஞ்சலியும், சபிண்டீகரணம் முதலான ஆன்மிகக் கிரியைகளும் அன்னாரின் மட்டுவில் இல்லத்தில் 1992-04-27 திங்கட்கிழமை நடைபெற உள்ளதால், அவ்வமயம்; உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அன்பர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் வடக்கு,
செட்டியகுறிச்சி (கர்ணன் வீதி),
மட்டுவில். [20715]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நல்ல முயற்சி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடற்றுறை — கடல்வளக் கல்விப் பீடம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வடக்கு நோர்வேயில் உள்ள ட்ரொம்சோ பல்கலைக்கழகம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

இம்மாத மத்தியில் நோர்வே சென்றிருந்த யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் துரைராசாவின் ஆர்வத்தினாலும், முயற்சியினாலும் இதற்கான ஒரு சாத்திய நிலை உருவாகி இருக்கிறது.

உலகில் கடல்வளத்தைத் தக்கவாறு பயன்படுத்தித் தனது பொருளாதாரத்தை விருத்தி செய்து முன்னணி வகிக்கும் நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகும். அந்நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றின் ஒத்துழைப்போடு யாழ். பல்கலைக்கழகத்தில் கடற்றுறை கல்விப் பீடம் அமையுமானால் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

தமிழீழத்தில் நிலப்பரப்பை விட விஸ்தீரணமானது கடற்பரப்பு. அதுவும் நிறைந்த வளமுடையது. எங்களைச் சூழவுள்ள கடல் வளங்கள் உரிய முறையில் தக்கபடி இன்னும் இனங் கண்டறியப்படவில்லை. உரிய அளவில் பயன்படுத்தப்படவும் இல்லை.

அப்படியிருந்தும் ஈழப்போர் தொடங்குவதற்கு முன்னர் முழு இலங்கையினதும், கடல் உணவுத் தேவையில் மூன்றில் ஒரு பங்கு வடக்கு-கிழக்கை அண்டிய கடற் பகுதியிலிருந்தே பெறப்பட்டது. உரியவாறு பயன்படுத்தப்பட்டால் எங்கள் பொருளாதார வளர்ச்சியில் குறைந்தது 40 சதவீதத்தையேனும் கடல் வளம் மூலம் ஈட்டலாம் என்பது மதிப்பீடு.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடற்றொழில் கல்விப் பீடம் அமையுமானால் அது எமது பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை.

கடற்றொழில் கல்வி பீடத்தில் கப்பல் கட்டுதல், கடற் பொறியியற்றுறை (Marine Engineering) ஆகியனவும் சேர்க்கப்பட்டால் பல வசதிகளும் வாய்ப்புகளும் உருவாகும்.

யாழ். பல்கலைக்கழகம் வெறும் உயர் கல்விக் கூடமாக மட்டும் இருத்தலாகாது. அது சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்து மக்களினதும், மண்ணினதும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் உதவ வேண்டும்; உழைக்க வேண்டும்.

அந்த வகையில் விவசாய பீடம் அமைக்கப்பட்டது போல கடற்றொழில் கல்விப் பீடத்தை நிறுவ முயற்சி எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது. பொறியியல் பீடமும் அவசியம். மூன்று பீடங்களும் முறையே விவசாய, கடற்றொழில், கைத்தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். இவை, வெறும் புத்தகக் கல்வியோடு நிற்காமல், நடைமுறைக் கல்வியிலும், பயிற்சியிலும், தமது கவனத்தைச் செலுத்தினால் தான் அவை தமிழர் சமூகத்தின் அங்கங்களாக மாற முடியும்.

விவசாய, கடற்றொழில், பொறியியல் பீடங்கள் செய்யும் ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் மக்களின் தேவைகள், பொருளாதார மேம்பாடு, நாட்டுவள மேம்பாடு ஆகியவற்றை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

# தனிநாட்டுக் கோரிக்கை பேரமல்ல; வெற்றிவரை போர்க் கோலம் தேவை

## தந்தை செல்வா செப்பிய உறுதி படைத்த மொழிகள்

தமிழர்களுக்கு தனி நாடும், தனி அரசும் தேவை என்று முழக்கம் செய்த தந்தை செல்வநாயகத்தின் பதினைந்தாவது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி ''தமிழீழத் தந்தை செல்வா'' என்ற நூலில் இருந்து சில பகுதிகளைத் தொகுத்து கட்டுரை வடிவில் வெளியிடுகிறோம்.

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற நாட்டில் — ஒன்றுக்கு மேற்பட்ட மொழி, பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் முறை நிலவுகின்ற நாட்டில் — ஒற்றையாட்சி உதவாது. அது எண்ணிக்கை ஏற்றமுள்ள ஓர் இனத்தின் பேரினவாதத்துக்குத் தான் வழி வகுக்கும் என்பதை நன்கு உணர்ந்து இலங்கையில் சிங்களவர்களும் செந்தமிழர்களும் தமக்குள் முட்டி மோதாது ஒவ்வோர் இனத்தின் தனித்துவத்தையும் பேணி, அதே வேளையில் அந்நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்ட உகந்த ஒரே வழி இணைப்பாட்சிதான் என்பதை உணர்ந்து ''இணைப் பாட்சியில் இனிய வாழ்வு காண்போம். தமிழரின் தனித்துவத்தை நிலை நாட்டுவோம். இலங்கை தீவில் ஒற்றுமையை பேணுவோம்'' என்று ஓங்கிக் குரல் எழுப்பியவர் தந்தை செல்வநாயகம் அவர்கள்.

ஆனால் இணைப்பாட்சி முறை ஒரு நாட்டில் வெற்றி பெற வேண்டும் என்றால் அங்கு வாழும் இனங்களிடையே மற்றைய இனங்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைக்கின்ற இயல்பும் இருக்க வேண்டும். இது இல்லாத நிலையில் இணைப்பாட்சித் தத்துவம் என்பது ஏற்றுக் கொள்ளப்படத் தக்க ஒரு கோட்பாடாக விளங்க முடியாது.

இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என்று குரல் எழுப்பியபோதும், மாநிலத் தன்னாட்சி, பிரதேச சபை, மாவட்ட சபை, அதிகாரங்களைப் பன்முகப் படுத்துதல் அல்லது பகிர்ந்து கொள்ளல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சிங்களத் தலைவர்களிடையும், சிங்கள மக்களிடையிலும் மனமாற்றத்தைக் கொண்டு வர தந்தை செல்வா பலமுறை முயன்றார்.

### கூடி வாழ முடியாது

இந்த முயற்சியின் விளைவாகவே 1957 இல் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம் தோன்றியது. 1965 இல் டட்லி — செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1970 களில் செல்வநாயகம் — சிறிமாவோ உடன்பாடு உருவாகியது.

ஆனால் மேற்கூறிய ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் எல்லாம் மை காய்வதற்கு முன்பேயே சிங்களத் தலைவர்களால் கிழித்தெறியப்பட்டதனால் தான் இனிமேல் சிங்கள மக்களோடு கூடிவாழ முடியாது என்ற முடிவுக்கு தந்தை செல்வா வந்தார். அவர் காட்டிய வழியை தமிழ் மக்கள் அப்படியே ஏற்றனர்.

இலங்கைக்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்ததாக சொல்லப்படுகிறது. ஆனால், இந்த விடுதலை [illegible] யனுக்குப் பதில் [illegible] ஆட்சிக் கட்டில் ஏறவே வழி வகுத்தது. மக்களாட்சி என்ற பெயரில் 'மாக்களாட்சி'யும் ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழினத்தை ஒழித்துக் கட்டுகின்ற முயற்சிகளும் தொடர்ச்சியாக ஏற்பட்டதன் விளைவே சிங்களப் பெரும்பான்மை இனத்தின் நிலையான ஆட்சிக்கு வழிவகுக்க வாய்ப்பாகியது.

### நம்பிக்கை இழந்தார்

இலங்கை நாடாளுமன்ற அமைப்பில் தந்தை செல்வநாயகம் நம்பிக்கை இழந்தார். இலங்கை நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர்களின் பிரச்



தநதை செல்வா

சினைகள் அனைத்தையும் சிங்களத் தலைகளை எண்ணியே எண்ணிக்கை பலம் கொண்டே தீர்க்க முனைந்ததால் சிங்களத் தலைகளும் தமிழ்த் தலைகளும் முட்டி மோதின. இரத்த வெள்ளமும் பெருக்கெடுத்தது.

1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரம், 1958 இல் நடைபெற்ற இனப்படுகொலை, 1961 இல் காந்திய வழியில் நடத்தப்பட்ட அறப் போராட்டம் சிங்கள அரசினால் வெறி நோக்கோடு முறியடிக்கப்பட்ட நிகழ்ச்சி, பின்பு 1968 இல் தமிழ் மக்களுக்குச் சில சலுகைகளை வழங்குவதை எதிர்த்து சிங்கள முற்போக்கு வாதிகள் என்று கூறப்பட்ட இடதுசாரி இயக்கங்கள் ஆடிய வெறியாட்டம், பின்பு 1971 இல் படித்த சிங்கள இளைஞர்களிடையே ஏற்பட்ட இன வெறிக் கிளர்ச்சி, 1974 இல் அரசியலுக்கப்பால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சிங்களக் காவல் துறையினர் 9 அப்பாவித் தமிழர்களைச் சாகடித்த நிகழ்ச்சி என்பனவும்—

குறைந்த அளவு ஆறு அம்சக் கோரிக்கை சிங்களத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் சிங்களத் தலைமைப் பீடம் இன வெறி தலை விரித்தாட, தமிழர் கோரிக்கைகளுக்கு செவி மடுக்க மறுத்தமையுமே—

'எம்மிழந்த இறைமையை மீண்டும் நிலை நாட்டினால் அன்றி எமக்கு வாழ்வு இல்லை' என்ற முடிவுக்கு தந்தை செல்வாவை இட்டுச் சென்றது.

### கூடிவாழ முடியாது

இலங்கைக்கு விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்படும் 1948 ஆம் ஆண்டு தொட்டு 1976 ஆம் ஆண்டு வரை ஈழத்தமிழ் மக்களின் கொடியுரிமை, வாக்குரிமை, குடியுரிமை, நிலவுரிமை, மொழி உரிமை தொழில் [illegible] உரிமை அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் எம் தமிழீழ மண்ணிலேயே நாம் வேரோடும், வேரின் மண்ணோடும் சாய்க்கப்படுகின்ற நிலை உருவாகிய போது தான் இனிமேல் சிங்களவர்களுடன் கூடி வாழ முயல்வது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று தந்தை செல்வா தீர்க்கமான முடிவுக்கு வந்தார்.

### இறுதி ஆணை

அதனால் தான், தான் இறப்பதற்கு சில காலத்திற்கு முன் 19-11-1976 ல் ஈழத்தமிழ் மக்களுக்குத் தம் இறுதி ஆணை என்று கூறத்தக்க முறையில் உள்ளம் உருகுகின்ற நிலையில் நெஞ்சைத் தொடும் பாங்கில் வரலாறு படைக்கும் பின் வரும் கூற்றினை இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா மொழிந்தார்.

''தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒரு கால கட்டத்தில் கூட்டாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால் கூட்டரசு மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியப்படாது. கடந்த கால அனுபவங்கள் மூலம் இப்போது அறிந்து கொண்டு விட்டோம்.

''இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியாகப் பிரிந்து வாழ வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்டுக் கொள்ள முடியாது.

''எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கென தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் தமிழர்களுக்கென ஓர் இடம் இருக்கின்றது.

''எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை இழந்த எங்கள் உரிமையான அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எம் நிலையாகும்.

''தனித் தமிழீழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது. தனித் தமிழீழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும், மிகவும் கடினமானதென்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்து போக வேண்டும். எனவே நாங்கள் போராடித் தனித் தமிழீழத்தை நிறுவியே தீருவோம்.

''நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம் எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அகிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.''

தந்தை செல்வநாயகம் அவர்கள் காலத்துக்குக் காலம் கூறி வந்துள்ள அறிவுரைகளை நினைவு கொள்வோமாக.

### வெற்றி கிட்டும்

இதோ அவர் செப்பிய உறுதி படைத்த மொழிகள்:-

★ தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தில் இரத்தம் சிந்தியும், சிறையேற்றும், பொருள் நட்டமடைந்தும் உயிர் துறந்தும் அல்லல் உற்றுள்ளோம். இருந்தும் இது வரை வெற்றி கிட்டவில்லை. ஆனாலும் வெற்றி கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றே தான் நான் கூற விரும்புகிறேன்.

★ கடந்த காலங்களில் பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதி வெற்றி தமிழினத்திற்கே என்பது சந்தேகமறத் தெளிவாகி விட்டது இருந்தாலும் பூரண வெற்றி கிடைக்கும் வரை போர்க் கோலமிருந்தே ஆக வேண்டும். தோல்வி மனப்பான்மை அறவே கூடாது.

★ நாம் விடுக்கும் தனி நாட்டு கோரிக்கை மாற்ற முடியாத முடிவாகும். இது வெறும் பேரம் பேசுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையல்ல.

''Our Demand for a Separate state is an Irrevocable Decision It is not Just made for Bargaining Purposes.'' — தனி நாட்டு கோரிக்கை என்பது ஓர் புதிய கோரிக்கையல்ல. ஈழத்தில் ஒரு காலத்தில் தமிழர் தனியரசு செலுத்தியிருந்தோம். இழந்த அவ்வரசை மீண்டும் நிலை நாட்ட உறுதி பூண்டு விட்டோம். ★

## பலாலி கைதிகளை செஞ் அதிகாரி சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஏப் 26

பலாலியில் தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்களின் நலன்களை கவனிக்கச் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி அவர்களைச் சந்தித்த பின்னர் நேற்று யாழ் திரும்பினார்.

தடுத்துவைக்கப்பட்டவர்களுக்கு தேவையான சில உதவிப் பொருட்களை அவர் வழங்கினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தமது உறவினர்களுக்கு எழுதிய கடிதங்கள் நாளை முதல் உரியவர்களிடம் சேர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இன்று

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சிவானந்தா அணியை எதிர்த்து மனோகரா அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லிபடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

திருப்திகரமான தபால் சேவையை வழங்குவது குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ் அஞ்சல் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

அஞ்சல் சேவையைச் சேர்ந்த சகல தரங்களிலும் உள்ள உத்தியோகத்தர்கள் உப அஞ்சலதிபர்கள் ஊழியர்கள் பதிலாட்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றுவர். (உ)

## நாளை

யாழ். வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர கோவிலில் எழுந்தருளியுள்ள திருநாவுக்கரசர் குருவிழா நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### மேரி (செல்லம்) சுவாம்பிள்ளை

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சில்லாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான மேரி (செல்லம்) சுவாம்பிள்ளை காலமானார். அன்னார்காலம் சென்ற சுவாம்பிள்ளையின் அருமை மனைவியும், காலஞ்சென்ற சேவியர் சுவாம்பிள்ளை (இ. போ. ச.) சிக்டம் சுவாம்பிள்ளை, பேர்ளி நவரட்ணம். கிறிஸ்ரி யோசவ், பேசி இம்மானுவேல் ஆகியோரின் அருமைத் தாயாரும், பாப்பா. ஜெகஜோதி, றாஜேஸ், றஞ்சி, ஆகியோரின் மாமியும் காலம்சென்ற றேமன் செல்வரட்ணத்தின் (இ. போ. ச) சிறிய தாயாரும் சில்லாலை திருமதி புஸ்பம் செல்வரட்டினத்தின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, சில்லாலை புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
புஷ்பம் செல்வரட்ணம்
றேறோச்சர் வாசல்
சில்லாலை.

[20731]

### பிரான்சிஸ் பஸ்தியாம்பிள்ளை (ராஜன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வட்டக்கச்சியை வதிவிடமாகக் கொண்டு வைத்தியம் செய்தவருமான திரு பிரான்சிஸ் பஸ்தியாம்பிள்ளை [ராஜன்] 24 - 4 - 92 அன்று கொழும்பில் காலமானார்

இவர் சிசிலியா கிறேசின் அன்புக் கணவரும், ராஜ்குமார் [ஜேர்மனி], யூலிற், டக்லஸ் [ஓமான்], சகுநதலா, கிரிசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சேவியர், செல்லத்துரை, ஜோண், பயஸ் ஜேம்ஸ், நோயல், ஹென்றி போல், மணி ஆகியோரின் சகோதரரும், ஜமுனா, ராஜரட்ணம் [லைடன் தேயிலைக் களஞ்சிய உரிமையாளா], கமலா [ஓமான்], புறானோ (ஆஸ்ரேலியா) ஆகியோரின் மாமனாரும், மிருதுளா, றஞ்சீவன், நிராஜ், கிரிசான், கிரிஸ்ரா, வினி, சிந்து ஆகியோரின் பேரனுமாவார். உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறுகேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
D. V. ராஜரட்ணம்
18, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

[20723]

### சின்னத்தம்பி குலசேகரம் (குலம்)

மட்டுவில் தெற்கு, நுணாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி குலசேகரம் [குலம்] 23-4-92 இல் சுவிஸில் மரணமானார். இவர் ராதிகாவின் அன்புக் கணவரும், சுபாணியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், திரு. நவரத்தினம் இராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி நாகலிங்கம் தங்கம்மா, திருமதி கிருபாகரன் லீலாவதி, திருமதி தம்பிராசா பூமணி, திருமதி சின்னத்துரை, லோகாம்பிகை, திருமதி மனோகரராசா நேசமலர், திருமதி சிவமோகன் ஜெயந்திமாலா, புவனேஸ்வரி [சின்னமணி] ஆகியோரின் அன்புச் சகோதரரும். திரு. இ. மு. நாகலிங்கம் [தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு], திரு சு. கிருபாகரன், திரு எஸ். கே. தம்பிராசா [சிற்றி சூபலஸ் உரிமையாளர் மொறட்டுவ], திரு. க. சின்னத்துரை [சுவிஸ்], திரு. சி. மனோகரராசா, திரு. கா. சிவமோகன் [ஜேர்மன்], திருமதி சிவஞானம் ரூபிகா [லண்டன்], ந. ரவீந்திரன் [டென்மார்க்], ந. உமா [யாழ். மருத்துவபீட மாணவி], காலஞ்சென்ற செல்வி ந. சாந்தி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சின்னப்பு பொன்னம்மா, சிதம்பரப்பிள்ளை செல்லம்மா ஆகியோரின் பெறாமகனும், முருகதாஸ் [லண்டன்], இராமதாஸ் [கொழும்பு], கணேசதாஸ் [லண்டன்], நடேசதாஸ் [கொழும்பு], றூபகுமார் [சுவிஸ்], றகுணகுமார் [சுவிஸ்], றகுலகுமார் [சுவிஸ்], றஞ்சித்குமார் [சுவிஸ்], றமணகுமார் [லண்டன்], றோகான்குமார், அருள்ராஜ் [கனடா], சுரேஸ்ராஜ், சுகுணராஜ் [கொழும்பு], திக்சன் [சுவிஸ்], நிக்சன் [சுவிஸ்], ஜெனிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. சி. விசுவலிங்கம், திருமதி அப்புலிங்கம் பரிமளம், திரு. சி. சண்முகராசா, திருமதி பரமகுரு செல்வம், திருமதி சண்முகலிங்கம் தங்கராணி, திரு. சி. தங்கராசா, திருமதி சிவஞானம் லிங்கேஸ்வரி, திருமதி ராமநாதன் கமலாதேவி, திரு. சி. நாகேஸ்வரன் [தே. வீ. அ. அ. சபை யாழ்ப்பாணம்], திரு. சி. சிறிஸ்கந்தராசா [பிரான்ஸ்] ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-4-92 [ஞாயிற்றுக்கிழமை] இன்று சுவிஸில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்கொள்ளவும்.

தகவல்:
திரு. சு. கிருபாகரன்
[மைத்துனர்]
மட்டுவில் தெற்கு,
நுணாவில்,
சாவகச்சேரி.

[20733]

### நகரின்பல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்று பார்வையிட்டனர். சந்தையில் பெண் வியாபாரிகள் சிலர் இராணுவ அட்டூழியங்கள் குறித்து எடுத்துக் கூறினர். அதைக்கேட்ட பௌத்த குருமார் அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

காலை பத்து மணிக்கு பௌத்த குருமார் தூதுக் குழுவினர் நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்குச் சென்றனர். உள் வீதியை சுற்றிச் சென்று சுவாமி தரிசனம் செய்தனர். விசேட பூசைகளிலும் கலந்து கொண்டனர். ஆலயக் குருக்களுடன் உரையாடிய பின்னர் ஆலயமுன்றலில் கூடியிருந்த மக்களுக்கு பிரித் ஓதி, ஆசி வழங்கினர்.

''உங்கள் கஷ்டங்கள், வேதனைகளை இங்கு வந்து பார்த்த பின்னர் தான் உணர முடிகிறது. துயரத்தைச் சுமந்து காலம் கழிக்கும் உங்களுக்காக மனம்வருந்துகிறோம்''—

''கொழும்பு திரும்பியதும் உங்கள் வேதனைகளுக்கு முடிவு காண்பதற்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்''—என்று அங்கு மக்களிடம் அவர்கள் தெரிவித்ததனர்.

பௌத்த குழுவினர் நேற்று மாலை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைப் பிரதிநிதிகளையும், இந்து மத குருமார் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினர்.

]அ-உ-3 15-30]

### மணலாறுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றும்—

இரு தரப்பினருக்கும் இடையே ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக கடும் சமர் இடம்பெற்றது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய்க்கும் கொக்குளாய்க்கும் இடையே — 5 மைல் தூரப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் நேற்று சண்டையில் ஈடுபட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொக்குத்தொடுவாய் கொக்கிளாய் படை முகாம்களை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து தாக்க முற்பட்ட சமயமே அங்கு பலத்த சண்டை மூண்டதாக படையினர் தரப்பில் கூறப்பட்டது.

இந்த மோதல் சம்பவம் குறித்து மேலதிக தகவல்கள் ஏதும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

இதேசமயம் நேற்றைய கடும் சமரில் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று ஒரு செய்தி தெரியவந்தது.

[ஒ-3-15]

### வடபகுதியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வும் இல்லை. இராணுவ நடவடிக்கைகளில் மந்த நிலையும் இல்லை. நாம் சில நடவடிக்கைகளுக்கு திட்டம் தயாரித்துள்ளோம். அவற்றை வெளியிட முடியாது. உரிய காலத்தில் அவை மேற்கொள்ளப்படும்.

கூட்டுப்படைத் தலைமையகம் தொடர்ந்து இயங்குகிறது. கூட்டு நடவடிக்கைகளை இத் தலைமையகமே திட்டமிடுகிறது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

[இ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 [illegible] இல் 26-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மின்னல் தாக்கி 4 பேர் மரணம்

சென்னை, ஏப். 26

திருச்சியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர். அதே குடும்பத்தைச்சேர்ந்த 7 வயதுச் சிறுமி காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தர்மபுரி மாவட்டத்திலும் மற்றொருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார். [உ]



## பதவி வெற்றிடங்கள்

01. Work Supervisors & Trainees (வேலை மேற்பார்வையாளரும் பயிலுனரும்)
02. Technical Officers & Trainees (தொழில் நுட்ப அலுவலரும் பயிலுனரும்)
03. Quantity Surveyors & Trainees (கணிய அளவையியலாளரும் பயிலுனரும்)
04. Management Trainee (முகாமைத்துவப் பயிலுனர்)
05. Cost Accounting Assistant (கிரயவியல் உதவியாளர்)

மேற்படி பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை 27 - 04 - 92 திங்கட்கிழமை தொடக்கம் 30 - 04 - 92 வியாழக்கிழமை வரை தினமும் பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 6-00 மணிவரை கீழ்க்கண்ட விலாசத்தில் நடைபெறும். தகுதியானவர்கள் தங்கள் சுய விவரத்திரட்டுடன் நேரில் சமுகமளிக்கவும்.

30, செட்டித் தெரு,
நல்லூர்.

[சி-1939]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜோசபின் சவிரிமுத்து (நேசம்)

கொய்யாத் தோட்டத்தை சேர்ந்த திருமதிஜோசபின் சவிரிமுத்து 24 - 04 - 1992 அன்று காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற சவிரிமுத்து முத்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற ஜோசப், அல்பிறற் ஐயா, சூசம்மா வஸ்தியாம்பிள்ளை, ஆகியோரின் அன்பு சகோதரியும், இமல்டா, சகுந்தலா, சாள்ஸ் (மியாமி காமெண்ஸ்), தாசன் (குவைத்), பபா ஆகியோரின் அன்புத் தாயாரும், அலோசியஸ் (வொலங்கா லிமிட். கொழும்பு), எமடியூஸ் ஜெயம், ராஜினி, ராஜி, அன்ரன் சந்திரா (இளை முகாமையாளர் ப. ப. நோ. கூ. ச) அன்பு மாமியாரும், ஜொய்சி, ஜெயந்தி, சுகந்தி, சதீஸ், மக்சி, றொசானி, வதனி, ராஜீவ், சந்துரு, கோபி, அனுசியா, சிந்தியா, துஷாரா, ஆகியோரின் அன்புப் பேத்தியும், நீலியா, சிந்தியா, திவ்வியா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 27 - 04 - 92 [திங்கள்] காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
M. சாள்ஸ்
(மகன்)
51, பழைய பூங்கா வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[20730]

### வேலுப்பிள்ளை முருகேசு (சின்னத்துரை)

[மட்டக்களப்பு சிவநடராசா ஸ்ரோர்ஸ், முருகேசு அன்ட் பிறதேர்ஸ் உரிமையாளர்]

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகேசு 23-4-92 வியாழக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் இராசசுந்தரியின் அன்புக் கணவரும், வனிதா, காண்டீபன், ஜனகன், குணரூபன், ஹருஹரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசேகரம்—இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிதேவிப்பிள்ளை, தியாகராசா, காலஞ்சென்ற கார்த்திகேசு, மார்க்கண்டேயபிள்ளை [இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்], ஏகாம்பரநாதன் [முருகேசு அன்ட் பிறதர்ஸ்], தியாகராசா [கிராம சேவை அலுவலர் அல்வாய் கிழக்கு] ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீகணேசன் [சுவிஸ்], ஜெயராசன் [கனடா], சுந்தரராசன் [ஜேர்மனி], வரதராசன் [கனடா], தேவசுந்தரி [சுவிஸ்], யோகசுந்தரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். ஈமைக்கிரியைகள் 25 - 4 - 92 சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
வே. மார்க்கண்டேயபிள்ளை
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

[சி/1951]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org